சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 71/2018

07.11.2025.

DW -

பி.வா.சா. ஷகிலா க/பெ. அசோகன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-

வாதி சரஸ்வதியின் சகோதரரின் மனைவி என்றால் - சரிதான். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் - 28.05.2000 ம் வருடம். தாவா சொத்து கிரயம் வாங்கியது குறித்து நேரடியாக தெரியுமா என்றால் - தெரியாது. எனக்கு சொல்லப்பட்டதுதான். தாவா சொத்துக்கள் சரஸ்வதி பெயரில் உள்ள விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் - 2000 ம் ஆண்டிலேயே திருமணமாகி வந்தபோது சொன்னார். சரஸ்வதி பெயரிலிருந்து தாவா சொத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால் - என் மாமனார் நான்தான் சரஸ்வதி பெயரில் வாங்கியதாக சொன்னார். 2000 ம் வருடத்திலிருந்து இன்றைய தேதி வரை வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது சரஸ்வதி பெயரில் தான் உள்ளது என்றால் - சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.21 முதல் 27 வரையிலான ஆவணங்களில் தாவா சொத்தின் புல எண் குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான். தாவா சொத்துக்களை சரஸ்வதி அவரது சுய சம்பாத்தியத்தில் வாங்கியது என்றாலும் அதில் குடியிருப்பதற்கு எங்கள் யாருக்கும் எந்த அருகதையும் கிடையாது என்றால் - சரியல்ல. எனது பிரமாண பத்திரத்தில், என் மாமனார் குடும்பத்தையே நான்தான் நடத்தி வருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். நான் சொல்லியுள்ள செலவு தொகையான ரூ.1,50,000/-த்தை யாரிடம் கேட்டு செய்தேன் என்றால் - யாரிடமும் சொல்லவில்லை. சரஸ்வதியிடம் சொன்னேனா என்றால் - இல்லை. வீடு கட்டுவதற்கு அனுமதி யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் - சரஸ்வதி பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது. என் மாமனாருக்கு மூத்த மகன் யார் என்றால் - மனோகரன் தான். மனோகரனுடன் தான் என் மாமனார் இருந்தார் என்றால் - என் மாமனாருடன் மனோகரன் இருந்து வந்தார். என் மாமனார், கடன் பிரச்சினை இருக்கும்போது அவரது மகன்கள் பெயரில் எழுதாமல் ஏன் சரஸ்வதி பெயரில் எழுதி வைத்தார் என்றால் - கடன்காரர்கள் வந்து வீட்டை எடுத்துவிடக்கூடாது என்பதற்காக சரஸ்வதி பெயரில்

எழுதிவிட்டதாக சொன்னார். கடன் பிரச்சினை எப்போது முடிந்தது என்றால் - 2000 க்கு முன்பே கடன் பிரச்சினை முடிந்துவிட்டது. கடன் பிரச்சினை முடிந்தபிறகாவது தாவா சொத்தை தனது பெயரிலேயோ அல்லது தனது மகன்கள் பெயரிலோ எழுதி வைக்கும்படி என் மாமனார் கேட்டாரா என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு பெண் சுய சம்பாத்தியத்தில் கிரயம் பெற்ற சொத்தை ஒரு குடும்பமே அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தவறாக கட்சி நடத்தி வருகிறேன் என்றால் - சரியல்ல. என் மாமனார், என் கணவர் எப்போது இறந்தார்கள் என்றால் - இந்த வழக்கு நடந்து வரும் நிலையில் தான் இறந்தார்கள். வழக்கு நடைபெறும்போது இறந்துவிட்டதால் அங்கு வந்தால் தேவையில்லாத பிரச்சினை என்பதால் தான் வரவில்லை என்றும் மனிதாபிமானம் இல்லாமல் இல்லை என்று சொன்னால் - சரியல்ல. சரஸ்வதிக்கு சொந்தமான சொத்தை அவரிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் எ்னறால் - சரியல்ல. இன்றைய தேதி வரை தாவா சொத்து எனது மாமனாரால் கிரயம் பெறப்பட்டது என்று சொல்வதற்கு வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதால் தான் பொய் கட்சியாடி வருகிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.